தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 6 Special Issue: 02 December 2025
DOI: https://doi.org/10.63300/tm060225

# Kurinji Land People's Way of Life

**Jancyrani G***
Research scholar (FT), Department of Tamil, Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research, Chennai – 600078
ORCiD: https://orcid.org/0009-0003-4380-7621, Email: jancy_res@maher.ac.in
**Dr. G. Amala Karthiga****,
Assistant Professor, Department of Tamil, Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research, Chennai, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-2746-3035, Email: gamalakarthiga@maherfhs.ac.in

**Abstract:**

Although there are many studies on Sanga literature, Tamil lifestyle, Tamil culture, Tamil food, Tamil clothing, Tamil worship and rituals have been studied with a general focus. But only a few readings explain the readings about land, wealth, material, nature, industry, animal, wife's relationship and lifestyle of the people of the Sangam period based on beauty and lust. People of the Sangam period lived their live in a disciplinary system. Around two thousand years ago, the people of the Sangam period were well aware of the environment of the four planets. Also, the people of Kurinji land are called Kuravas, the people of Mullai land are called Ayar, the people of Maruta land are cultivators, the people of Neythal land are Bharatas and the people of Palai land are Einar. They have lived their life as per their land division. This research is a study that highlights the lifestyle of the Kurinji people who have been living in the sanga period and the social conditions and lifestyle identities related to them.

**Keywords:** *kurinji, Millet, Association, Industry, Food, Music, Puli Kudthi Pattan Nadukal.*

**References:**

[1] Amala karthiga, G. sangam Literature is a Scientific view . International Journal of Tamil Language and Literary Studies Volume 6, 2023.
[2] Dakshinamurthy, A. Thamizhar Naagarigam Panpaadu, Ainthinai Pathippagam, Chennai – 40, Thiruthiya Marupathippu, year 2019.
[3] Saravanan, P. Malaipadu khadam, Department of Tamil Development & Tamil Nadu Textbook And Educational Works Joint publication, Chennai -06, Frist Edition, Year2021.
[4] Velraj, R. First Language Tamil Development Organization, Sirappu malar Chennai-25, Year 2023.
[5] Harikumar, N. Kapilar's Kurinchi Patu, Department of Tamil Development & Tamil Nadu Textbook And Educational Works Joint publication, Chennai -06, Frist Edition, Year2021.
[6] Editorial Board, Tamil ilakkiyankalil unaviyalum ariviyal pinpulamum, volume-1 Anali pathipagam Coimbatore – 641045, Frist Edition, 2024.
[7] Kowmareeswari, S. Assisted by R. Karthikadevi, Text by Tirukkural Parimelazakar, KelaraAgencies Publishing Chennai-05, First Edition, Year 2002.
[8] R. Srinivasan, R. Purananuru Seyulum Seythigalum, Aniyagam Publishing, Chennai-30, First Edition, Year 2000.
[9] Thirunjnanasambandam, S. Tolkappiyam Porulathigaram, Kathir publishing House Chennai -05, First Edition.

**Keywords**: Mythology, Customs, Civilization, Culture, Tradition, Belief.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.



Tamilmanam

# குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல்

***க. ஜான்சி ராணி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக் கழகம், சென்னை-78.

****முனைவர் க. அமலா கார்த்திகா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத்தலைவர், மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக் கழகம், சென்னை -78.

**சுருக்கம் (Abstract)**

சங்க இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் பலவாக இருந்தாலும், தமிழர் வாழ்வியல், தமிழர் பண்பாடு, தமிழர் உணவு, தமிழர் ஆடைகள், தமிழர் வழிபாடுகளும், சடங்குகளும் என்ற பொது நோக்குடன் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் சில வாசிப்புகள் மட்டுமே சங்க கால மக்களின் நிலம், வளம், பொருள், இயற்கை, தொழில், விலங்கு, தலைவியின் உறவு மற்றும் அழகு புணர்ச்சி மற்றும் களவு புணர்ச்சி சார்ந்த வாழ்க்கை முறை குறித்த வாசிப்புகளை விளக்கி உரைக்கின்றன. சங்க கால மக்கள் தங்களின் வாழ்க்கை முறையை ஒரு ஒழுங்கு முறை கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்க கால மக்கள் நானிலங்களின் சுற்றுச் சூழலை நன்கு அறிந்தவர்களாகத் திகழ்ந்து வந்துள்ளனர். மேலும் குறிஞ்சி நிலத்தவர் குறவர் என்றும், முல்லை நிலத்தவர் ஆயர் என்றும், மருத நிலத்தவர் உழவர் என்றும் நெய்தல் நிலத்தவர் பரதவர் என்றும் பாலை நிலத்தவர் எயினர் என்றும் வகுத்து வாழ்ந்துள்ளனர். இவ்வாறாக வாழ்ந்து வந்துள்ள குறிஞ்சி மக்களின் வாழ்வியலும் அவற்றை குறித்த சமூகச் சூழல்களையும், வாழ்வியல் அடையாளங்களையும் எடுத்துரைக்கும் ஆய்வாக இவ்வாய்வு அமைக்கின்றது.

**குறிச்சொற்கள்:** குறிஞ்சி, தினை, சங்கம், தொழில், உணவு, இசை, புலிக்குத்திப்பட்டான்

**முன்னுரை**

பழங்காலத்தில் தமிழகத்தில் வழங்கி வந்த தமிழ் மொழியில் தோன்றி வளர்ந்த இலக்கியங்களில் ஒரு பகுதி இன்று வரையில் காக்கப்பட்டு வருகின்றது. அந்த பழைய இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் என்ற பெயரால் குறிக்கப்படுகின்றது. எனவே சங்கம் வைத்துத் தமிழ் மொழியை வளர்த்த காலத்தைச் சங்க காலம் எனலாம். கிமு.500 ஆண்டுகளும், கிபி.200 ஆண்டுகளும் சங்க காலம் எனப் பல்வேறு அறிஞர்களும் குறிப்பிடுகின்றனர். அச்சங்க கால மக்களின் வாழ்வியல் நிலைகளை ஓவியம் போன்று எடுத்துரைக்க எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களும் உள்ளன. சங்க கால மக்கள் வீரத்தையும், காதலையும் இரு கண்களாகப் போற்றினர். காதல், பெருமிதம், நீதி முதலான உணர்ச்சிகளை எட்டுத்தொகை நூல்கள் சித்தரிக்கின்றன. இதிலுள்ள பாடல்களை தொகுத்து எட்டு நூல்களாக ஆக்கியமையால் இவை எட்டுத்தொகை எனப்பட்டது**.** இதனை,

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறம் என்று**
**இத்திறத்த எட்டுத் தொகை"**

என்ற பழம்பாடல் எடுத்துரைக்கின்றது. இவற்றுள் அன்பின் ஐந்திணைகளில் முதலாவது உள்ள குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கும் ஆய்வாக இவ்வாய்வு அமைக்கின்றது.

**குறிஞ்சித் திணை**

அழகிய முகமும் எழில் தோற்றமும் கொண்ட முருகன் கருணையே வடிவானவர். தன்னைத் தஞ்சம் அடைந்தவர்களின் துன்பங்களைத் துடைத்துக் காக்கும் கந்தக் கடவுள் வேல் கொண்டு வினைதீர்க்கும் வடிவேலவன், முருகன் நெந்நிற முடையவனாதலின் அவனைத் தமிழ்க் கடவுள் என்பார்கள் சான்றோர்கள். இதன் காரணமாக குறிஞ்சி நில மக்கள் சேயோனாகிய முருகனை தெய்வமாக வழிப்பட்டு வந்துள்ளனர். நால்வகை நிலங்களுள் குறிஞ்சியே முதலாவது திணையாக கருதப்படுகின்றது. அதில் மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சியாகும். இந்நிலத்திற்கு உரிய கடவுளாக முருகன் போற்றப்பட்டுள்ளான். தமிழ் மொழியில் பண்பாடு முதிர்ந்து நின்ற காலத்திலேயே முருக வழிபாடு இருந்திருக்கின்றன என்பதனை பல்வேறு ஆய்வுகள் நமக்குப் புலப்படுத்துகின்றன**.**

**முருகக் கடவுள்**

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறான் சிவனைப் போற்றி சிவனின் நெற்றிக்கண் மேம்பட்டு உயர்ந்து விளங்குவது போல முப்பெரு மன்னர்களுள் மேம்பட்டு விளங்கும் பேரரசன் நீ என்று நால்வகைப் படையுடன் உன் சேனை உயர்ந்து பெற்றிருந்தாலும் அறநெறி ஒட்டியே அரசுக்கு வெற்றி பெற்றுதருவதாகும். இதில் அழகிய இயற்கையைக் கொண்டு வருணனைச் செய்யும் நன்மாறான் முருகனையும் போற்ற மறக்கவில்லை. முருகனை அழகிய பெயரால் செந்தில் என்றும், மஞ்ஞையன் என்றும், தகரன் என்றும் அழைப்பதுண்டு. செந்தில் என்பது திருச்செந்தூரைக் குறிக்கும் பெயராகும். இதனை,

**“திங்கள் அன்ன தண் பெருஞ் சாயலும், வானத்து அன்ன வண்மையும் மூன்றும்,**
**உடையை ஆகி இல்லோர் கையற, நீ நீடு வாழிய நெடுந்தகை! தாழ் நீர்,**
**வெண் தலைப் புணரி அலைக்கும் செந்தில்!”[1] (புறம் பா:55)**

என்ற பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய அழகிய இயற்கையை வருணித்துக் கூறும் ஞாயிறு போல ஒறுத்தலும், திங்களைப் போலத் தணிவும், வானத்தில் பொழிகின்ற மழையைப் போல வழங்கலும் சிறப்பித்து விளங்குகின்றன. நீளமாகவும், ஆழமாகவும் உடைய கடலின் பரப்பளவு மேல்லுள்ள வெண்ணிற அலைகள் ஒன்றோடு ஒன்று மோதும் திருச்செந்தூரில் முருகக்கடவுள் நிலைப்பெற்றிருக்கும் அங்கு காற்றால் நிறப்பப்பட்டு இருக்கும் கரு மணல் நிறைந்த அந்த ஊரில் நீ பலகாலம் வாழ்வாயாக என்று புறநானூற்றில் முருகனை செந்தில் என்ற சொல்லைக் கொண்டு குறிப்பிட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

**திணைகளின் முப்பொருள் உணர்த்தும் முறை**

தொல்காப்பிய பொருளதிகார அகத்திணையியலில் முதல், கரு, உரி ஆகிய மூன்றும் இணைந்து காணப்படுவதைத் திணை என்கிறார். குறிஞ்சித்திணை குறித்து இலக்கண நூல்கள்யாவும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் இம்மூன்றையும் பாகுபடுத்தியுள்ளது. இதனை,

**“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே நுவலுங் காலை முறைசிறந் தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங் காலை”[2]**
**(தொல் அகத்-3)**

என்ற நூற்பாவில் அறிய முடிகின்றது. மேலும் தொல்காப்பியர் முப்பொருள் பற்றிக் கூறுகிறார். குறிஞ்சியின் நிலம், பொழுது, கரு, உரி ஒரு கால அட்டவணையில் காணலாம்.

| | |
|---|---|
| **குறிஞ்சி நிலம்** | **மலையும் மலை சார்ந்த இடமும்** |
| **பெரும் பொழுது** | **குளிர்காலம் முன்பனிக் காலம்** |
| **சிறு பொழுது** | **யாமம்** |
| **கருப் பொருள்** | **தெய்வம், மக்கள், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில்** |
| **உரிப் பொருள்** | **புணர்தலும் புணர்தல் நிமித்தமும்** |
| **குறிஞ்சி ஆசிரியர்** | **கபிலர்** |

குறிஞ்சிக்கு கபிலர் என்ற சொல் வலுப்படுகின்றது.

**குறிஞ்சி நில மக்கள்**

மக்களின் வாழ்க்கையில் ஒழுகிய பல்வேறு நெறிகளுக்கும் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளுக்கும் தொடர்புகண்டு புதிய ஓர் இலக்கிய மரபினைத் தோற்றுவித்தவர் தொல்காப்பியர் ஆவார். குறிஞ்சி நில மக்கள் குன்றவர்களாவர். இவர்கள் பெரும்பாலும் வேட்டுவர்களே. ஆண்கள் குன்றவர், குறவன், சிலம்பன், வேட்டுவர், கானவர் என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளனர். அதேப் போல் பெண்களை குறத்தி, கொடிச்சி என்றும் அழைப்பர். இவர்கள் பெரும்பாலும் தினையை விதைத்து உண்பர். பரண்களைக் கட்டி அவற்றின் மேல் ஏறி நின்று கவண் வீசி விலங்குகளையும், பறவைகளையும் விரட்டுவர். இதனை,

**“புலத்துப்புனிறு போகிய புனஞ்சூழ் குறவர்**
**உயர்நிலை இதண மேறிக் கைபுடையூஉ**
**அகன்மலை யிறும்பிற் றுவன்றிய யானைப்**
**பகனிலை தளர்க்கும் கவணுமிழ் கடுங்கல்”[3]**

**(மலைபடு பா:203-206)**

என்ற மலைபடுகடாம் பாடல் வரிகள் உணர்த்துகிறது. மலை நிலத்துக் குறவர்கள் தாம் வேட்டையாடிய உடும் பிறைச்சி, கடமானிறைச்சி, பன்றியிறைச்சி முதலியவற்றை உண்டு வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்த ஊர் சிறு குடி என்றும் குறிச்சி என்றும் பெயர் பெறும். இதனை,

**“மலை விளையாடும் குன்றுசேர் சிறுகுடி”[4] (குறுந்-108:1)**

என்று குறுந்தொகையின் பாடலில் வெளிப்படுவதைக் காணலாம்.

**மக்களின் உணவு மற்றும் தொழில்**

உலகில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் உணவு என்பது முக்கியமான ஒன்றாகும். உணவுகள் இருவகைப்படும். அவை சைவம், மற்றும் அசைவம் என வகுத்தனர். ஒவ்வொரு உயிருக்கும் அது வாழும் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப உணவுப் பட்டியல் அமைக்கிறது. இவ்வுணவை சமைத்து பக்குவப்படுத்தி உண்டவன் மனிதனாவான். அவ்வகையில் குறிஞ்சி நிலத்து மக்கள் கிழங்கு அவிழ்தல், தேன்னெடுத்தல்,

தினை விதைத்தல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களின் மூலமாக தங்களுக்கு தேவையான உணவுகளைத் தாமே தேடிக் கொண்டர். மேலும் மலையில் இயற்கையாகக் கிடைக்கூடிய மா, பலா, வாழை, நெல்லி முதலான கனிகளும் ஐவனம், பழங்களையும் உண்டு வாழ்ந்து வாழ்ந்தனர். அதேப் போல் குறுந்தொகையில் பெரும்பாலும் உணவியல்(371,100,257,342,198,392,360) பற்றிக் குறிப்பிடுக்கின்றன. பத்துப்பாட்டில் குறிக்கப்படும் மலைப்படுகடாமில் குறமகளிர் தரும் மணக்கும் விருந்தைப் புகழ வார்த்தைகள் கூறமுடியவில்லையே. இதனை,

**"நறுமலர் அணிந்த நாறு இரும் உச்சிக் குறமகள் ஆக்கிய வால் அவிழ் வல்சி அகம் மலி உவகை ஆர்வமொடு அளைஇ முறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்"[5]**

**(மலைபடு பா:182-185)**

மலை மீது ஏறிக் கொண்டு வந்து கொடுத்த ஒளிர்கின்ற மலையில் விளைந்த அரும் பொருள்களோடு மூங்கில் குழாய்க்குள் பெய்து விளைவித்த தேனால் செய்த கள்ளின் தெளிவைக் குறைவின்றிக் குடித்து நறுமணக் களிப்பால் மகிழ்வார்களாம். அதேப் போல் குறிஞ்சி நில தொழில் செய்பவர்களிடத்தில் தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், கூடை பின்னுதல், வலைப்பின்னுதல், முத்துக் குளித்தல் போன்ற சிறு தொழில்களைக் கொண்ட கலப்புப் பொருளாதாரச் சூழலும் மக்களிடையே நிலவியுள்ளது. மேலும் இவர்களின் முதன்மை உணவுப் பொருளாகத் தினை விளங்கியுள்ளது. தினை உணவுகள் நிலத்தில் பயிர்களாக விளைவிக்கப்பட்டுப் பின் பயன்பாட்டிற்கு வருகின்றது.

**மருத்துவம்**

பண்டையக் காலத்தில் இயற்கைக் சார்ந்த மருத்துவம் பயன்பாட்டில் இருந்தது. நோயைக் கண்டறிவதற்கு முன் மனித உடல்களை அதன் தன்மைக்களுக்கேற்ப பிரித்து வைத்திருந்தனர். பசலை நோய் வருவதன் காரணத்தையும் நோய் இன்னது என்பதையும் ஐயமறத் துணிந்து மருந்து அளித்து குணமாக்கும் வழிமுறைகளை அன்றே சங்கப் புலவர்கள் செய்துள்ளனர். குறிப்பாக அகம் சார்ந்த நூலில் அதிகம் பசலை நோய் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது.

**"அலர்வாய் அயலிற் பெண்டிர் பசலை பாட**
**ஈங்கா கின்றால் தோழி[6] (நற்., பா.378) நறுநுதல் பசத்தல்**
**அஞ்சி[7] (நற்.,பா.1) நேய்தந்தனனே தோழி**
**பசலை ஆர்ந்த நம் குவளையம்**
**கண்ணே"[8] (குறு.,பா.13)**

என பசலை நோயைக் கண்டுபிடித்து அதற்குக் காரணத்தையும் குறிப்பாகப் பெண்களுக்கே உரித்தானதாகச் சுட்டியுள்ளார்கள். சங்கப்புலவர்கள் இந்நோய் பற்றி சி. சுப்பிரமணியன் விளக்கமளிக்கிறார். பசலை எனும் ஒருவகை குறுகிய காலத்தோலில் நிறமாறுபாட்டு நோயினைப் புலவர்கள் குறித்திருக்கிறார்கள். இது பெண்களுக்கு மட்டுமே வரக்கூடிய நோயாகவும் உரைத்திருக்கிறார்கள். நாளமில்லாச் சுரப்பிகள் சுரக்கும் மனித வளர்ச்சிக்கு உதவும் நீர்களின் வேதியியல் வினை நிகழ்வால் ஏற்படும் மாறுபாடாக இருக்கலாம் என்று பெண் மருத்துவ அறிஞர்கள் கருதிகின்றனர்.

**குறிஞ்சி நில மக்களின் இசை நயம்**

சங்க இலக்கியங்களில் இசைக்கருவிகள், பண்கள், இசை வாணர்கள் பற்றிய எண்ணற்ற செய்திகள் இடம் பெறுகின்றன. மலைச்சாரல் உள்ள தினைப்புனத்தில் யானையொன்று தினையுண்ண மறந்து நின்றது. இதற்குக் காரணம் குறப்பெண் பாடிய குறிஞ்சிப் பண்ணாகும். இதனை,

**"ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி பெருவரை**
**மருங்கில் குறிஞ்சி பாடக் குரலும் கொள்ளாது**
**நிலையினும் பெயராது படாஅப் பைங்கண் பாடுபெற்று**
**ஒய்யென மறம்புகல் மழகளிறு உறங்கும்"[9]**

**(அகம்-102)**

என்ற பாடலில் குறிஞ்சியின் குறமகள் ஒருத்தி குறிஞ்சிப் பண்ணைத் திறத்துடன் பாட தினைக்கதிரை யுண்ணவந்த ஒரு யானை அதனை உண்ணாமலும் அவ்விடத்தை விட்டு புடை பெயராமலும் அப்பண்ணால் நெஞ்சம் ஈர்க்கப்பட்டு மனமுருகி நின்று கொண்டு உறங்கிவிட்டது என்ற குறிப்பு மகளிர் தம் இசைத்திறமைக்கு ஒரு சான்றாகும். மேலும் பெரும்பாணாற்றுப்படையில் இடை மகன் இசைத்து மகிழ்ந்தான் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனை,

**"வில்யாழ் இசைக்கும் விரல்எறி குறிஞ்சி"[10] (பெரும் பா-182)**

என்ற பெரும்பாணாற்றுப்படைப் பாடல் மரல் நாரினால் கட்டப்பட்ட வில் யாழின் குறிஞ்சிப் பண்ணை இடை மகன் இசைத்து மகிழ்ந்தான் என்று உணர்த்துகின்றது. குறிஞ்சி நிலத்தோர் பயன்படுத்திய பறை தொண்டகப் பறையாகும். மேலும் பண்டை இசைக்கருவிகளுள் முதன்மையானது யாழாகும்.

**குறிஞ்சி நில மக்களின் வீரச் சிறப்பு**

வெட்சி குறிஞ்சிக்குப் புறனானது. வெட்சி என்னும் புறத்திணை குறிஞ்சி என்னும் அகத்திணைக்குப் புறனாக அமையும். அதாவது பகைவர்கள் அஞ்சுமாறு தோன்றும் பதினான்கு துறைகளைக் கொண்டது. இதனை,

**"புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின் வெட்சி**
**தானே குறிஞ்சியது புறனே"[11]**

**(தொல் பொருள்:1)**

தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள புறத்திணையியலில் உள்ள வெட்சி திணையில் குறிப்பிடுவது 'வெட்சி குறிஞ்சிக்குப் புறனானது'. ஏனெனில் நிறைகோடல் குறிஞ்சிக்குரிய மலை சார்ந்த நிலத்தின் கண் நிகழும் அந்நிலத்து மக்கள் பிறநாட்டு ஆநிரையைக் களவில் கோடல் ஒரு புடைக் குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒன்றுவதாலும் அதற்கு அது புறனாயிற்று. அதே போல் தலைவனின் வீரத்தையும் புறநானூறு பலச் செய்திகளைக் குறிப்பிடுகின்றது. வேழத்தை வீழ்த்திப், புலியை மடிவித்து, மானைக் கொன்று, பன்றியைச் சாய்த்தப் பின்னர் புற்றில் இருந்த உடும்பில் சென்று அம்பு பதிந்தது என்று கூறப்படுகின்றது. அரசனின் வில் அம்பு அதன் ஆற்றலைச் சொல் அம்பில் தருகிறார். சொற்கள் அடுக்கி அம்பு போல் வெளிப்படுகின்றன. அதன் அழகான சொல்லோட்டம் அமைந்துள்ளது. இதனை,

**"வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி, பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்,**
**புழல்தலைப் புகர்க் கலை உருட்டி உரல்தலைக், கேழல் பன்றி வீழ அயலது,**
**ஆழற் புற்றத்து உடும்பில் செற்றும், வில்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்"[12]**

**(புறம்:152)**

வீரன் அவன் விடும் அம்பு எங்கெங்கோ பாய்கிறது என்று கூறவது அவன் செயலாற்றலை எடுத்து உரைக்கிறது. வில்லாற்றலைத் தன் சொல்லாற்றலால் கவிஞர் புலப்படுத்துகிறார். தலைவனை புகழ மற்றொரு செய்தி யானையை எறிந்து விட்டான். அதனால் முறிந்தது அவனது கைவேல். அதன் மழுங்கலை நிமிர்த்திக் கொள்கிறான். விழுந்து பட்ட யானையின் மருப்பைக் கொண்டு அதில் பொருத்தி நிமிர்த்துகிறான். அவ்வேலினை மீண்டும் கையில் ஏந்துகிறான். பகைவர் அஞ்சி நடுங்குகின்றனர். இதைக் குறித்த வள்ளுவர் குறிப்பிடும் செய்தி,

**"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும்"[13] (குறள்:774)**

இதே கருத்தை புறப்பாடல்,

**"ஒருகை இரும்பிணத்து எயிறு மிறையாகத்**
**திரிந்து வாய்வாள் திருத்தாத்**
**தனக்கு இரிந்தானைப் பெயர்புறம் நகுமே"[14]**
**(புறம்:284)**

அஞ்சிப் பெயர்கிறவனைக் கண்டு இவன் சிரித்து நகைக்கிறான் என்கிறார். நகும் என்பதை வள்ளுவரும் கூறக் காண்கிறோம். புறநானூற்றில் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியைப் பாண்டுரங் கண்ணனார் பாடியது. அதை பற்றிய செய்தி சோழ நாட்டு அரசன் இவன். களம் பல கண்டவன், புலித்தோலைக் கவசமாகக் கொண்டு உள்ளான். எதிரிகள் அம்புபட்டு அது கிழிபட்டு உள்ளது. அவன் தற்போது யானை மீது செல்கிறான். அது மதம் பட்டு உள்ளது. பாகனின் கட்டுக்கு அடங்காமல் அது வெறி கொண்டு உள்ளது. இதனை,

**"புலி நிறக் கவசம் பூம் பொறி சிதைய எய் கணை கிழித்த பகட்டு எழில் மார்பின் மறலி அன்ன களிற்று மிசையோனே; களிறே முந்நீர் வழங்கு நாவாய் போலவும்"[15] (புறம்:13)**

வீரர்கள் சுறாமீன்கள் இனம் போல இரு பக்கமும் மெய்த்துக் காக்கின்றன. இதனைத் தொடர்ந்து சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியில் குறிப்பிடும் செய்தி, தலைவனீன் சீற்றம் முருகனோடு ஒப்பிட்டுக் கூறுவதாக அமைந்த புறப்பாடல். இதனை,

**"முருகற் சீற்றத்து, உரு கெழு குருசில்!**
**மயங்கு வள்ளை, மலர் ஆம்பல்"[16] (புறம்:16)**

முருகனைப் போன்ற சீற்றம் உடையவன் நீ. பகைவர் நாட்டை எரியூட்டி அழித்தன. உன் யானைகள் உனக்குத் துணையாக நின்று போர் செய்தன. பகைவர்கள் வயல்கள் வளம் மிக்கவை. வள்ளைக் கொடியும், ஆம்பல் மலரும், பகன்றைக் காயும், பாகல்கனியும் மிக்கவை; மற்றும் கரும்பு மிக்கு விளையும் கழனிகள் அவை அனைத்தும் பாழ்பட்டு அழிந்து ஒழிந்தன என்று கூறுவதன் மூலம் சங்ககால மக்கள் வீரத்தில் சிறப்பு மிக்கவர்களாக விளங்கியுள்ளமையை இப் பாடல்களின் மூலமாக அறிய முடிகின்றது.

**குறிஞ்சி நில மக்களின் அரசியல் நிலை**

குறிஞ்சி நில மக்கள் வாழ்ந்த பகுதிகளில் தலைமை உருவாகியிருக்க இடம் உண்டு. மலைப் பகுதியில் வேட்டைக் காரர்கள் தமக்குள் வலிமை உடைய ஒருவனைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்திருத்தலும் நடந்து இருக்கக் கூடியதே. சேர நாட்டு வேந்தர்கள் வில்லைத் தம் சின்னமாகக்

கொண்டிருத்தலின் அங்கே வேட்டுவர்களிலிருந்து அரசு உருவாகி இருக்கலாம் என டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள் கூறுகின்றார். ஆயர்களைப் போலவே வேடுவர்களும் தம் கையில் கோலைக் (அம்பு) கொண்டுள்ளதையும் காணலாம். வளம் மிகுந்த ஆற்றுப் பாய்ச்சலுள்ள இடங்களைப் போர்ப் பண்பு மிக்க மலை நிலத்தவரும், காட்டு நிலத்தவரும் கைப்பற்றிய பின்னர் அடங்கும் அரசு முறை பரவி இருக்கலாம் என அவரே கருதுகின்றார்.

சேரர்களை பலப் பெயர்களைக் கொண்டு அழைத்தனர். அப்பெயர்கள் பெரும்பாலும் மலையைச் சார்ந்து குறிப்பிடுகின்றனர். வானவர், வில்லவர், குடவர், குட்டுவர், பொறையர், மலையர் என்று சேரரை அழைப்பது சங்க இலக்கியங்களில் அறிய முடிகிறது. வானவர் என்ற சொல்லுக்கு மேலுலகத்தவர் என்று பொருள் கொண்ட திரு. கனகசபைப்பிள்ளை அவர்கள் இமய வரம்பன் , வானவரம்பன் என்னும் பெயர்களைக் கொண்டு சேரர் வங்காளத்தைச் சார்ந்தவர்கள் என்றார். ஆனால் மேட்டு நிலப் பகுதியான மலை நாட்டுக்குரியவர் என்னும் பொருளே பொருத்தமானது என்பார் திரு.சுப்பிரமணியம். பொறை என்பது மலையைக் குறிக்கும் சொல்லாகும். பூழி நாட்டையாண் குறிக்கும் சொல்லாகும். பூழி நாட்டையாண்டதால் பூழியர் எனவும் அழைக்கப்பட்டனர். இதன் மூலம் பண்டையக் காலச் சமூகத்தில் அரசியல் சூழல்கள் இருந்துள்ளமையை அறிய முடிகின்றது.

**புலிக்குத்திப் பட்டான் நடுகல்**

ஏலகிரி மலையில் 14 கிராமங்கள் உள்ளன. இவற்றில் ஏராளமான பழங்கற்காலத் தடையங்களும், நடுகல் மற்றும் கல்வெட்டுகள் தொடர்ச்சியாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இம்மலையில் புலிக்குத்திப் பட்டான் நடுகல் கிடைத்திருப்பதை அறியலாம், மலையும் மலைச் சார்ந்த இடங்கள் குறிஞ்சி நில மக்கள் வாழ்ந்து வந்தனர். இவற்றில் கருப் பொருளாக விளங்கும் விலங்கு புலி எனப்பட்டது. புலி நடுகல் என்ற சான்று ஏலகிரிமலையில் கிடைத்திருப்பதைக் காணலாம். ஏலகிரி மலையிலுள்ள அத்தனவூரில் புலிக்குத்திப்பட்டான் நடுகல் ஒன்று உள்ளது. அங்கு இருக்கும் விடுதியின் உள்ளேயுள்ள புடங்கனேரி மற்றும் முட்லி மரங்களின் அடியிலுள்ளது இந்நடுகல் 5அடி உயரமும், 3அடி அகலமும் கொண்ட பிரமாண்டமான பலகைக் கல்லில் இந்நடுகல் நேர்த்தியுடன் செதுக்கப்பட்டுள்ளது. இது சோழர் காலத்து நடுகல்லாகும். ஒரு காலத்தில் இந்த ஏலகிரி மலைகளில்வாழ்ந்த கொடிய புலிகள் உலவி வந்தன என்பதற்கு இந்நடுகல் சிறந்த சான்றாகும். வீரனின் உருவம் பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளது. இது வீரனுக்கு முக்கியத்துவம் தரும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. வீரனின்வலது புறம் கொண்டையிட்டுள்ளான். இரண்டு கைகளிலும் நீண்ட வாளினால் புலியின் வயிற்றில் வீரன் குத்துகிறான். அந்த இடது கையைப் புலி கௌவி உள்ளது. புலியும் வீரனோடு வீரத்தோடுப் போரிடுவது போல இந்நடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. வீரன் கைகளில் கடகங்களும், கால்களில் வீரக்கழல்களும் வீரன் அணிந்துள்ளான், இடைக்கச்சில் குறுவாள் ஒன்று உள்ளது. புலியோடு போரிடுவதற்க்கு இவ்வீரன் மூன்று வாள்களோடு சென்றதாக இச்சிற்பம் எடுத்துரைக்கிறது. மேலும் இந்நடுகல்லை இவ்வூர் மக்கள் 'புலிக்குட்டி சீயன்' சாமி என்றழைக்கின்றனர். இம்மலைவாழ் மக்கள் தாத்தாவைச் சீயன் என்பர். புலியைக் குத்திய தாத்தா என்றும் பொருள் கொள்ளலாம். மஞ்சள், குங்குமம், வேப்பிலை, பூக்கள், பழங்கள், வைத்து கோழி அறுத்து படையலிட்டும் வருகின்றச் செய்திகளை நாம் அறிய முடிகின்றது.

**முடிவுரை**

தொல்காப்பிய அகத்திணையியலில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் செய்திகள் சிறுது விரித்தும் மாற்றியும் அழகுற விவரிக்கப்பட்டுள்ளன. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என முப்பொருளின் மூலமாக மக்களின் வாழ்க்கை முறை விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

தலைவன், தலைவி பெரும்பாலும் களவு வாழ்க்கையை மலைகளில் நிகழ்த்தி வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அகத்திணையியலில் அறிய முடிகின்றது. அதைக் குறித்த சங்க இலக்கியத்தில் காணப் பெறும் கபிலரின் பாடல்களின் எண்ணிக்கை 235 ஆகும். கபிலரின் பாடல்களில் அகத்திணை மரபுகள் அனைத்தும் ஒருசேர எடுத்துக் காட்டப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

சங்க அகப்பாடல்களில் குறிப்பாகக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் பல்வேறு குறிஞ்சி நிலப்பகுதிகள் சுட்டப்பட்டுள்ளன. அதில் முக்கியமான ஒன்றாக ஏலகிரி மலைகளில் குறிஞ்சி நில மக்கள் வாழ்ந்துள்ளமையை நாம் அறிய முடியும். அவற்றின் கருப்பொருளாக விளங்கும் விலங்கு புலி. அவ்வூரில் புலி நடுகல் வைத்து வழிப்பட்டதற்கானச் சான்றும் கிடைத்துள்ளன. குறிஞ்சியில் வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் திணையும் விதைத்து, வேட்டையாடி இறைச்சியும் உண்டு வாழ்ந்து இருப்பதை மலைபடு கடாமில் காணலாம். அதில் பெண்கள் ஆனந்தமாக விருந்தளித்து உண்பதையும் இவற்றில் காணலாம்.

சங்க காலத்தில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் வீரம் நிறைந்தவர்களாகவும், இசையில் சிறப்பு பெற்றவர்களாகவும், கொடைத் தன்மை மிக்கவர்களாக இருந்துள்ளமையை இவ்வாய்வானது நமக்கு விரிவாக எடுத்துரைப்பதை அறிய முடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**

[1] அமலா கார்த்திகா, க. “சங்க இலக்கியம் – ஓர் அறிவியல் பார்வை”. தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், மலர் – 6, அக்டோபர் 2023.

[2] தட்சிணாமூர்த்தி, அ. தமிழர் நாகரிகமும் பண்பாடும். ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-40, திருத்திய மறுபதிப்பு, 2019.

[3] சரவணன், ப. மலைபடு கடாம். தமிழ் வளர்ச்சி துறை & தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கூட்டு வெளியீடு, சென்னை-06, முதல் பதிப்பு, வருடம் 2021.

[4] வேல்ராஜ், R. முதல் மொழி மற்றும் அமைப்பு. சிறப்புமலர், சென்னை-25, வருடம் 2023

[5] ஹரிகுமார், நா. கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு. தமிழ் வளர்ச்சிதுறை&தமிழ்நாடுபாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கூட்டு வெளியீடு, சென்னை-06, முதல் பதிப்பு, வருடம் 2022,

[6] பதிப்பாசிரியர் குழு, தமிழ் இலக்கியங்களில் உணவியலும் அறிவிய பின்புலமும், தொகுதி-1, அனலி பதிப்பகம் – கோவை - 45, முதற்பதிப்பு, 2024.

[7] கௌமாரீஸ்வரி, S. உதவி. கார்த்திகாதேவி, R. திருக்குறள் பரிமேலழகர் உரை, கௌராஏஜென்ஸீஸ் பதிப்பகம் சென்னை-05, முதற் பதிப்பு, வருடம் 2002.

[8] சீனிவாசன், ரா. புறநானூறு செய்யுளும் செய்திகளும். அணியகம் பதிப்பகம், சென்னை-30, முதல்பதிப்பு, வருடம்2000.

[9] திருஞானசம்பந்தம், ச.தொல்காப்பியம் பொருளதிகாரம். கதிர் பதிப்பகம், சென்னை-05, முதற்பதிப்பு.

tamilmanam